DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Deposition of Witness

2022ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி செல்வி.M. புஷ்பராணி, B.A., B.L., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - பழனி | **PW-12** | வயது |
| த/க பெயர் | | | தொழில் |
| கிராமம் | | | தாலூக்கா |
| மாவட்டம் | | | |

<u>முதல் விசாரணை:</u>-

நான் தற்போது தர்மபுரி மாவட்டம் சமத்துவபுரத்தில் வசித்து வருகிறேன். நான் தர்மபுரி மாவட்டம் கம்பையநல்லூர் அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளியில் இரவுக் காவலராக வேலை பார்த்து வருகிறேன். கடந்த 2012ம் ஆண்டு ஒரு நாள் TNPSC தேர்வு நடைபெற்றது. நான் இரவுக் காவலராக இருந்தாலும் அன்று TNPSC தேர்வு என்பதால் பள்ளியில் தலைமை ஆசிரியர் உத்தரவின்பேரில் பரிட்சை அன்று காலை வேளையிலும் எனது பணியை மேற்கொண்டேன். எனது பணியானது அன்று பள்ளியின் அனைத்து கேட்டுகளையும் திறந்துவிட்டேன். பள்ளிக்கு TNPSC தேர்வு எழுதுவதற்காக ஒரு தேர்வர் மட்டும் 10 மணிக்கு மேல் 5 நிமிடம் லேட்டாக வந்தார். அந்த தேர்வரை பள்ளியின் நுழைவு வாயில் கேட்டில் இருந்த அதிகாரிகள் விசாரித்துவிட்டு, அந்த தேர்வரை தேர்வு எழுதுவற்காக பள்ளிக்குள் செல்ல அனுமதித்தனர். அதன் பின்னர் பரிட்டை முடிந்த பின்னர் தேர்வர்கள் வெளியே வந்தனர். மேற்படி லேட்டாக வந்து தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட அந்த தேர்வரை மட்டும் அதிகாரிகள் நிறுத்தி விசாரித்தனர். காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். வருடங்கள் பல ஆகிவிட்டதால் அந்த தேர்வரின்

முகம் எனக்கு நினைவில் இல்லை. வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரித்தனர்.

சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :

போலீசார் விசாரணையின்போது, லேட்டாக தேர்வு எழுத வந்த தேர்வர், தேர்வு எழுதுவதற்கு முன்பாக தனது கையில் வைத்திருந்த ஜெராக்ஸ் பேப்பர் கட்டை வருவாய்த்துறை அதிகாரிகளிடம் கொடுத்து சென்றார் என்றும், பின்னிட்டு தேர்வு எழுதி முடித்த பின்பு அவரை வருவாய்த்துறை அதிகாரிகள் அந்த தேர்வரை விசாரித்தனர் என்றும், அவருடைய பெயர் சுரேஷ்குமார் என்றும், மேலும் அவர் 11.08.2012 ம் தேதி இரவு திருவண்ணாமலைக்கு சென்று ரங்கராஜன் என்பவர் மூலமாக கார்த்திக் என்பவரிடம் பணம் ரூ.3,00,000/-ம் கொடுத்து தேர்விற்கு முன்பே வினாத்தாள்களை வாங்கி வந்ததாக சொன்னார் என்றும், மீதியிருந்த பணம் ரூ.50,000/- தன்னிடம் இருப்பதாக சொல்லி, அதை எடுத்து ஆஜர் செய்தார் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க உண்மையை மறைத்து வருடங்கள் ஆகிவிட்டதால் எதிரி சுரேஷ்குமாரை அடையாளம் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Deposition of Witness

2022ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி செல்வி.M. புஷ்பராணி, B.A., B.L., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | -குமார் | **PW-13** | வயது |
| த/க பெயர் | | | தொழில் |
| கிராமம் | | | தாலுக்கா |
| மாவட்டம் | | | |

<u>முதல் விசாரணை:</u>-

நான் தற்போது தர்மபுரி மாவட்டம், அரூர் ஒன்றியம், முத்தானூர் என்ற ஊரில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் M.A,. B.Ed., படித்துள்ளேன். அ.சா.11 அசோக் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். சுரேஷ்குமார், அருண், பூபேஷ், குமார் ஆகியோர்களை எனக்குத் தெரியும், அவர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். 2012ம் வருடத்தில் நடைபெற்ற TNPSC Group 2 தேர்விற்கு நான் விண்ணப்பம் செய்திருந்தேன். பரிட்சையும் எழுதினேன். எங்கள் ஊரைச் சேர்ந்த நிறைய நபர்களும் மேற்படி பரிட்சைக்கு விண்ணப்பம் செய்திருந்தார்கள். அவர்கள் யார் என்று குறிப்பாக எனக்குத் தெரியவில்லை. நான் தேர்வு எழுதிய தேதி, மாதம் நினைவு இல்லை, வருடம் மட்டும் 2012ம் ஆண்டு ஆகும். பின்னிட்டு சுரேஷ்குமார், அருண், பூபேஷ் ஆகியோர்களால் வினாத்தாள் வெளியானது போல் பேப்பரில் படித்து தெரிந்து கொண்டேன். அதன் பின்னிட்டு என்னை யாரும் மற்றும் போலீசாரும் இந்த வழக்கு சம்பந்தமாக அழைக்கவில்லை. நான் எங்கு சென்றும், யாரையும் அடையாளம் காட்டவில்லை. 2013ம் ஆண்டு என்னை ஒரு முறை சிபிசிஐடி போலீசார் விசாரித்தார்கள்.

சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :

இந்த வழக்கு சம்பந்தமாக என்னை தர்மபுரி மாவட்டம், கம்பையநல்லூர் காவல் நிலைய போலீசார் மற்றும் சிபிசிஐடி காவல் துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரணை செய்தார்கள் என்றும், அப்போது நான் 12.08.2012 ம் தேதி நடைபெற்ற TNPSC Group-2 தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற எண்ணத்தில், எங்கள் ஊரிலுள்ள ஏரி மற்றும் கோவில் போன்ற இடங்களில் படித்து வந்தேன் என்றும், என்னைப்போல் எங்கள் ஊரைச் சேர்ந்த சுரேஷ்குமார், அருண், பூபேஷ் மற்றும் குமார் ஆகியோர்களும் மேற்படி தேர்விற்கு விண்ணப்பித்து மேற்படி இடங்களில் படித்து வந்தார்கள் என்றும், மேற்படி சுரேஷ்குமார், அருண், பூபேஷ் ஆகியோர்கள் தனியாகக்கூடி ரகசியமாக ஏதோ பேசிக்கொண்டு வந்தார்கள் என்றும், மேலும் மேற்படி மூவரும் என்னைப் பார்த்து, நாங்கள் மேற்படி தேர்வில் எப்படியாவது தேர்ச்சியாகி விடுவோம் என்றும், நாங்கள் பணம் புரட்டி மேற்படி தேர்விற்கான வினாவிடைகளை கள்ளத்தனமாகப் பெற்று மேற்படி தேர்வில் வெற்றி பெறுவோம் என்றும் என்னிடம் சொல்லிவந்தார்கள் என்றும், மேலும் மேற்படி தேர்விற்கு ஓரிரு நாட்களுக்கு முன்பு மேற்படி மூவரும் அரூர் வந்து வெளியூர் போவதாக சொல்லிவிட்டுச் சென்றார்கள் என்றும், மேற்படி நபர்கள் வினாவிடைகள் அவர்களுக்கு கிடைத்த காரணத்தினால்தான் மேற்படி தேர்வில் தேர்ச்சி பெறுவோம் என்று என்னிடம் சொல்லியது தெரியவந்தது என்றும், மேலும் 27.08.2012 ம் தேதியன்று மேற்படி எதிரிகளைத் தேடி போலீசார் முத்தனூரில் கண்காணித்து வந்ததாகவும், அதன்பின்னிட்டு போலீசார் என்னை மேற்படி எதிரிகள் மூவரையும் அடையாளம் காட்டும்படி கேட்டுக் கொண்டதன்பேரில் முத்தனூர் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்த எங்கள் ஊரைச்சேர்ந்த அருண் மற்றும் பூபேசை அன்று இரவு 10 மணிக்கு அடையாளம் காட்டினேன் என்றும் போலீசார் அவர்கள் இருவரையும் கைது செய்து விசாரித்தபோது அவர்கள் எவ்வித வற்புறுத்தலும் இன்றி தானாக முன்வந்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர் முன்பாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும் சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. தற்போது எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் மற்றும் எனக்கு நன்கு பழக்கமானவர்கள் என்பதால் அவர்களைக் காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Deposition of Witness

2022ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி செல்வி.M. புஷ்பராணி, B.A., B.L., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் - ராமலிங்கம் **PW-14** | வயது |
| த/க பெயர் | தொழில் |
| கிராமம் | தாலூக்கா |
| மாவட்டம் | |

முதல் விசாரணை:-

நான் தர்மபுரி மாவட்டம் முத்தானூரில் வசித்து வருகிறேன். எனது தகப்பனார் நாராயணன், எனது தகப்பனாரை ஊரில் சக்கரை என்று அழைப்பார்கள். நான் சமையல் மாஸ்டர் வேலை செய்து வருகிறேன். எங்கள் ஊரைச் சுரேஷ்குமார், அருண், பூபேஷ், குமார் ஆகியோர்களை எனக்குத் தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எந்த விவரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

போலீசார் விசாரணையின்போது, கடந்த 2012 ம் வருடத்தில் ஒரு நாள் நான் சமையல் காண்ட்ராக்டர் வேலைக்கு செல்வதற்காக அரூர் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தபோது, சிமெண்ட் கலர் காரை அருண் ஓட்ட, சுரேஷ்குமார் மற்றும் பூபேஷ் உட்கார்ந்து கொண்டு திருவண்ணாமலைக்கு செல்வதாக என்னிடம் சொல்லிவிட்டு சென்றார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எந்த விவரமும் தெரியாது என்று மாற்றி சொல்கிறேன் என்றால், சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Deposition of Witness

2022ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி செல்வி.M. புஷ்பராணி, B.A., B.L., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - சின்னத்தம்பி | **PW-15** | வயது |
| த/க பெயர் | | | தொழில் |
| கிராமம் | | | தாலூக்கா |
| மாவட்டம் | | | |

<u>முதல் விசாரணை:</u>-

நான் தற்போது தர்மபுரி மாவட்டம், முத்தனூரில் வசித்து வருகிறேன். ஆவணங்களில் எனது பெயர் ராமகிருஷ்ணன் என்று உள்ளது. ஊரில் என்னை சின்னத்தம்பி என்று அழைப்பார்கள். எங்கள் ஊரைச் சுரேஷ்குமார், அருண், பூபேஷ், குமார் ஆகியோர்களை எனக்குத் தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. யாரும் என்னிடம் பணம் எதுவும் கேட்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.</u>

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

போலீசார் விசாரணையின்போது, கடந்த 2012ம் வருடத்தில் ஒரு நாள் சுரேஷ்குமார் என்னிடம் வந்து தனக்கு கைமாத்தாக பணம் வேண்டும் என்று கேட்டார்

என்றும், நான் அவரிடம் எதற்காக அந்த தொகை என்று கேட்டபோது, TNPSC தேர்விற்கு முன்பே தேர்விற்கான கேள்வித்தாள்கள் பெறுவதற்காக அந்த பணம் வேண்டும் என்றும், மேலும் தேர்விற்கு மூன்று நாட்களுக்கு முன்பாக ஒரு சிமெண்ட் கலர் காரை அருண் ஓட்ட, சுரேஷ்குமார் மற்றும் பூபேஷ் உட்கார்ந்து கொண்டு எங்கள் ஊரில் வந்து இறங்கினார்கள் என்றும், அதன்பின்பாக இந்த வழக்கு பற்றிய விவரங்களைத் தெரிந்து கொண்டேன் என்றும் சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எந்த விவரமும் தெரியாது என்று மாற்றி சொல்கிறேன் என்றால், சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Deposition of Witness

2022ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி செல்வி.M. புஷ்பராணி, B.A., B.L., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | -ராஜா | **PW-16** | வயது |
| த/க பெயர் | | | தொழில் |
| கிராமம் | | | தாலூக்கா |
| மாவட்டம் | | | |

<u>முதல் விசாரணை:</u>-

நான் தர்மபுரி மாவட்டம் முத்தானூரில் வசித்து வருகிறேன். நான் கிரானைட் வேலை செய்து வருகிறேன். எங்கள் ஊரைச் சுரேஷ்குமார், அருண், பூபேஷ், குமார் ஆகியோர்களை எனக்குத் தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எந்த விவரமும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.</u>

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :

போலீசார் விசாரணையின்போது, கடந்த 2012ம் வருடத்தில் ஒரு நாள் நான் வேலைக்கு செல்வதற்காக அரூர் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தபோது, சிமெண்ட் கலர் காரை அருண் ஓட்ட, சுரேஷ்குமார் மற்றும் பூபேஷ் உட்கார்ந்து கொண்டு திருவண்ணாமலைக்கு செல்வதாக என்னிடம் சொல்லிவிட்டு சென்றார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால், சரியல்ல. தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க இவ்வழக்கு சம்பந்தமாக எனக்கு எந்த விவரமும் தெரியாது என்று மாற்றி சொல்கிறேன் என்றால், சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.